# பட்டதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்

# பட்டமளிப்பு விழா – 2014

## (1) பட்டமளிப்பு விழா நடைபெறும் திகதி,நேரம்

2014ம் வருடத்திற்கான வெளிவாரி பட்டதாரிகளுக்கான **பட்டமளிப்பு விழா** கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் **2015 செப்டம்பர் மாதம் 15ம்** திகதி மூன்று அமர்வுகளில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**முதலாம் அமர்வு** காலை. 7.30 மணிக்கு **(தரித்து நிற்றல்)**
அனுமதி சீட்டு இலக்கம் **i** முதல் நுழைவுச்சீட்டு இலக்கம் **vii** வரையும்
அனுமதி சீட்டு இலக்கம் 1**A** முதல் நுழைவுச்சீட்டு இலக்கம் 900**A** வரையும்

**இரண்டாம் அமர்வு** மு.ப. 11.30 மணிக்கு **(தரித்து நிற்றல்)**
அனுமதிசீட்டு இலக்கம் 1**B** முதல் நுழைவுச்சீட்டு இலக்கம் 910**B** வரையும்

**மூன்றாம் அமர்வு பி.ப 3.00 மணிக்கு (தரித்து நிற்றல்)**
அனுமதிசீட்டு இலக்கம் 1**C** முதல் நுழைவுச்சீட்டு இலக்கம் 910**C** வரையும்

## (02) அதிதிகள்/ பெற்றோர்/ பட்டதாரிகளுக்கான அறிவுரைகள் ( மிக முக்கியம்)

**இடவசதியின்மை காரணமாக** சகல பட்டதாரிகளுக்கும் தங்களுடைய பொறுப்பாளர்/பெற்றோர்களுக்காக **ஒரு** நுழைவுச்சீடடை, நீங்கள் பட்டத்திற்கான மேலங்கியைப் பெறுவதற்காக பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக்கல்வி நிலையத்திற்குச் சமூகமளிக்கும் போது விநியோகிக்கப்படும். பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டு பொறுப்பாளர்/பெற்றோர்களுக்காக விநியோகிக்கும் நுழைவுச்சீட்டினை தங்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட **ஒரு** நபருக்கு மாத்திரமேயாகும்.

## (03) பட்டமளிப்பு விழாவுக்கான உடை

- ஆண் பட்டதாரிகள் (மதகுருமார் தவிர்ந்த) யாவரும் தேசிய உடை அல்லது ஐரோப்பிய உடை (நீண்ட காற்சட்டையும் கோர்ட்டுடன் கழுத்துப்பட்டி) அடங்கிய ஆடை அணியவேண்டும்
- மதகுருமார் தவிர்ந்த ஏனைய பெண் பட்டதாரிகள் சாரி அணிய வேண்டும்.
- **அனைத்து பட்டதாரிகளும் பட்டத்துக்கான மேலங்கி அணிதல்வேண்டும்.**

## (04) புகைபடம் எடுத்தல்

**பட்டமளிப்பு விழாக்கூடத்திற்குள் புகைப்படம் எடுத்தல்**

பட்டமளிப்பின் போது எந்தவொரு தனியார் துறையினருக்கோ தனிநபருக்கோ புகைப்படம் எடுப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. பட்டமளிப்பின் போது புகைப்படம் எடுப்பதற்காக உத்தியோகபூர்வமாக ஒரு நிலையத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர். தங்களின் பட்ட மேலங்கியை பெற்றுக் கொள்வதற்காக எமது காரியாலயத்திற்கு வரும் போது புகைப்படம் சம்பந்தமான விடயங்களை அவர்களுடன் பேசி அறிந்துக் கொள்ளலாம்.

**(05) பட்டமளிப்புக்கான மேலங்கியையும் மாலையையும் பெற்றுக் கொள்ளல்.**

2015 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை தொடர் தொலைக்கல்வி நிலையத்தில் நடைபெறும். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தினத்தை தவிர்ந்த ஏனைய தினங்கள் வழங்கப்படமாட்டாது.**பட்டமேலங்கியை (Cloak) பெற்றுக் கொள்வதற்கு பட்டதாரி வரும்போது தேசிய அடையாள அட்டையையும் கட்டாயமாக கொண்டு வரவேண்டும்.**

| | | |
|---|---|---|
| சுட்டிலக்கம் | D 0001 முதல் D 0562 வரை | 2015- 08 -25 திகதி |
| சுட்டிலக்கம் | D 0563 முதல் D 1075 வரை | 2015- 08 -26 திகதி |
| சுட்டிலக்கம் | D 1077 முதல் D 1526 வரை | 2015- 08 -27 திகதி |
| சுட்டிலக்கம் | D 1529 முதல் D 2133 வரை | 2015- 08 -28 திகதி |
| சுட்டிலக்கம் | D 2134 முதல் D 2677 வரை | 2015- 08 -31 திகதி |
| சுட்டிலக்கம் | D 2679 முதல் D 3509 வரை | 2015- 09 -01 திகதி |
| சுட்டிலக்கம் | D 3510 முதல் D 4229 வரை | 2015- 09 -02 திகதி |
| சுட்டிலக்கம் | D 4230 முதல் D 4681 வரை | 2015- 09 -03 திகதி |
| சுட்டிலக்கம் | D 4682 முதல் D 5182 வரை | 2015- 09 -04 திகதி |
| சுட்டிலக்கம் | D 5183 முதல் D 5762 வரை | 2015- 09 -05 திகதி |
| சுட்டிலக்கம் | D 5765 முதல் D 6311 வரை | 2015- 09 -07 திகதி |
| சுட்டிலக்கம் | D 6314 முதல் D 6458 வரை | 2015- 09 -08 திகதி |
| வணிக முகாமைத்துவமாணி (BBA) பட்டதாரிகளுக்காக | | 2015- 09 -08 திகதி |

**(06) பட்டமளிப்பு விழாவிற்கு சமூகமளிக்க முடியாதவர்கள்**

பட்டமளிப்பு விழாவிற்கு கலந்துகொள்ள பதிவு செய்த பின்னர் அல்லது பட்டமளிப்புக்கான மேலங்கியை பெற்றுக்கொண்ட பின்னர் தவிர்க்க முடியாத காரணத்தினால் கலந்து கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அதுபற்றிய விபரத்தை **2015 செப்டம்பர் 04ம் திகதி பி.ப 4.00மணிக்கு முன்னர் தொடர் தொலைக்கல்வி நிலையத்திற்கு எழுத்து மூலமாக அறியத்தரவேண்டும்**. இல்லாவிடில் பட்டமளிப்பு விழாவிற்கு பற்குபற்றுவோாரின் சரியான கணக்கெடுப்பை பெறுவதில் சிரமம் ஏற்படும்.

**(07) மேலதிக விபரங்களுக்கும் விளக்கங்களுக்கும்**
**வரவேற்பாளர் : தொலை பேசி. இல 081-239 2218**

பிரதி பதிவாளர்
தொடர் தொலைக்கல்வி நிலையம்,
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.
2015- 07-16